பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 12 ஷஃபா: 21 இதழ்: 67
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-7-78

...7-28 PERIODICALS DIVISION

இன்று யாழ். நகர் வரும்

# அமைச்சரிடம் அ. எ. சங்கம் சமர்ப்பிக்கவிருக்கும் மகஜர்

(யாழ்ப்பாணம்)

'வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் சேவையாற்றும் தமிழ் ஊழியர்கள், தகுதியுடையவர்களாக இருந்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காரியாலயங்களில் வெற்றிடங்கள் இல்லாததினால் அவர்கள் மாற்றம் பெறுவதில்லை. எனவே காரியாலய நிர்வாகத்தைப் பரவலாக்கிச் சகல தமிழ் ஊழியர்களையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்ற வசதிசெய்யுமாறு கோருகின்றோம்.''

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானமடங்கிய மகஜர் ஒன்று, இன்று யாழ். நகருக்கு விஜயம் செய்யும் பொதுநிர்வாகஉள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவிடம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ். கிளை சமர்ப்பிக்கவிருக்கிறது.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் பின்வருமாறு:

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்ட தமிழ்மொழி விசேட மசோதாவின் அடிப்படையில், தமிழ்மொழியில் கிடைக்கும் கடிதங்களுக்குத் தமிழிலேயே கடிதத் தொடர்பைச் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனினும் கடிதத் தொடர்புகளைத் தாமதமின்றி ஏற்படுத்துவதற்குத் தமிழ்த் தட்டச்சுக் கருவிகளும், தட்டெழுத்தாளர்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்;

''தலைமைக் காரியாலயங்களிலிருந்து அனுப்பப்படும் சுற்றுநிருபங்கள் தனிச் சிங்க

(6ம் பக்கம் பார்க்க)

# அ. தி. மு. க. கூட்டணி

# வெற்றி நடை!

## முத்து அமோக வெற்றி

சென்னை, ஜூலை 27

மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கடைசியாகக் கிடைத்த முடிவுகளின்படி புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அ. இ. அ. தி. மு. கழகம் அதிகப்படியான இடங்களைக் கைப்பற்றி முன்னணியில் திகழ்கிறது.

கடைசியாகக் கிடைத்த முடிவுகளின் விபரம் வருமாறு,

| | |
|---|---|
| வெளியான முடிவுகள் | 31 |
| அ. இ. தி. மு. க. ... | 18 |
| கம்யூனிஸ்ட்கட்சி ... | 1 |
| மார்.கம். கட்சி ... | 5 |
| இந்திராகாங்கிரஸ் ... | 5 |
| தி. மு. க. ... | 1 |
| தமிழ்நாடு தி.மு.க.... | 1 |

அ. இ. தி. மு. கழகக் கூட்டணியின் சார்பில் 10வது வட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் மதுரை நகர மேயர் முத்து 2555 வாக்குகள்பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

இவரை எதிர்த்துப்போட்டியிட்ட தி. மு. க. வேட்பாளரை விட இவருக்கு 622வாக்குகள் அதிகமாகக் கிடைத்தன. தி. மு. க. வேட்பாளரும் கழகப்பிரமுகருமான திரு. தென்னரசு 12வது வட்டத்தில் தோற்றுப்போனார், இங்கு அ. இ. தி. மு. கழக வேட்பாளர் பால்ராஜ் வெற்றி பெற்றார்.

தேர்தல் முடிவுகளை அறிவதற்காக நகரின் பல இடங்களிலும் பொதுமக்கள் பெருந்திரளாக ஆங்காங்கே கூடியிருந்தார்கள். நெரிசல் அதிகமாகி ஒரு இடத்தில் குழப்பம் ஏற்பட்டது. இதில் 3 வேட்பாளர்களும் கட்சிப்பிரமுகர்கள் இருவரும் காயமுற்றனர்.

65 வட்டங்களைக் கொண்ட மதுரை மாநகராட்சி மன்றத்துக்கு 26ம் தேதி தேர்தல் நடைபெற்றது. முடிவுகள் இன்று காலைமுதல் எண்ணப்பட்டு இரவு நள்ளிரவுவரை முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மிகுதி முடிவுகள் இன்று அறிவிக்கப்படும்.

### மீண்டும் உங்கள் பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை எழுதும் தினப் பலன் மீண்டும் ஆகஸ்ட் 1-ம் திகதி முதல் 'ஈழநாடு' இதழில் தொடர்ந்து வெளிவரும். (ஆ-ர்)

### விழுப்புரம் சாதிக்கலவரம்:

# நிலைமையை கட்டுப்படுத்த எம். ஜி. ஆர். அவசர ஏற்பாடு

## இதுவரை 12 பேர் படுகொலை

சென்னை, ஜூலை 27

விழுப்புரத்தில் அரிஜனங்களுக்கும் உயர்சாதி இந்துக்களுக்கும் இடையில் எழுந்துள்ள கலவரநிலையைப்பற்றி ஆராய்ந்துநடவடிக்கை எடுப்பதற்காக தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அரிசனநலத்துறை அமைச்சர் திரு, சவுந்தரபாண்டியனையும், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பனையும் அங்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

அரிஜனப்பெண் ஒருவரின் கற்புக்கு பங்கம் விளைவிக்கப்பட்டது உண்மையானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்களில் அரசியல் தொடர்பு நிச்சயமாக இல்லையென்று திரு, இராமச்சந்திரன் நிருபர்களிடம் கூறினார். விழுப்புரத்தில் அமைதியை ஏற்படுத்த சகல கட்சிகளையும் கொண்ட குழுவொன்றை அமைப்பதுபற்றி ஆலோசித்துவருவதாகவும் அவர் சொன்னார்.

அரிசனங்களுக்கும் உயர்சாதி இந்துக்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்த மோதல்களில் இதுவரை கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 12ஆக உயர்ந்துள்ளது.

ஏற்கனவே 9 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒரு பெண் உட்பட வேறு மூன்றுபேரின் சடலங்கள் விழுப்புரத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள. இங்கு அரச

(6-ம் பக்கம் பார்க்க)

### கான்ஸ்டபிள் மதுபோதையில் இருந்தாராம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமை நேரத்தில் மது போதையில் இருந்ததாகக் கூறப்படும் பொலிஸ்கான்ஸ்டபிள்ஒருவர் உதவிப்பொலிஸ் அதிபர் திரு.ரி. ஆனந்தராஜாவினால் நேற்றுத் தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளார்.

விசாரணை தொடர்கிறது. (செ)

### அரசாங்க லிகிதர்சேவை சங்க மகஜர்

(யாழ்ப்பாணம்)

இன்று வடபகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ் கிளை மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளது.

இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் வருமாறு:

எழுதுவினைஞர் சேவையில் உள்ள முதலாம் வகுப்பு உயர்ச்சிக்குச் சங்கத்தேர்ச்சியின்மையை நீக்கி, இதுவரை உயர்ச்சி கொடாத தமிழ் எழுதுவினைஞரை மூப்பின் அடிப்படையில் உயர்ச்சி வழங்குமாறு கோருகிறோம்.

லிகிதரின் யாழ்ப்பாணச் சேவையை 5 வருடமாக்குதல்,

டஸ் சேவையை விஸ்தரித்து அரச ஊழியர்களுக்கு இ. போ. சபை பருவகாலப் பிர

(6ம் பக்கம் பார்க்க)

### களனியில் 3-வது மட்பாண்டத் தொழிற்சாலை

(கொழும்பு)

இலங்கையின் மூன்றாவது மட்பாண்டத் தொழிற்சாலை களனியில் அமைக்கப்பட இருக்கிறது.

இத்திட்டத்தை அமைச்சரவை தற்போது பரிசீலனை செய்துவருகிறது. இத்தொழிற்சாலையை அமைப்பதற்கு கூட்டுத்தாபனம் வெளிநாட்டிலிருந்து 7 கோடி ரூபாவைக் கடனாகப் பெறவுள்ளது.

பிலிபந்தலையிலும் நீர்கொழும்பிலும் இயங்கிவரும்தொழிற்சாலைகளில் உற்பத்திசெய்யப்படும் மட்பாண்டப் பொருட்கள் நாட்டின் தேவையில் 60 சத வீதத்தையே பூர்த்திசெய்கிறது என்றும் மூன்றாவது தொழிற்சாலையில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதும் நாட்டின் முழுத்தேவையும் சமாளிக்கப்படும் என்றும் கூட்டுத்தாபனத் தலைவர் கூறினார். (இ)

### இரண்டாவது தேசிய மாநாடு

# தந்தை செல்வா சமாதி அஞ்சலி முதல்நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் முழுநாள் நிகழ்ச்சிகளாக நடைபெறவிருக்கின்றது.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சியாக தந்தை செல்வா சமாதிக்கு கூட்டணிப்பிரமுகர்களும், இளைஞர்களும், மகளிரும் அஞ்சலிசெலுத்துவர்.

முதல்நாள் 29ம் திகதி காலை 9-30 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் மாநாடு ஆரம்பமாகும். மங்களப்பேரிகை முழங்க தொண்டர்கள் அணிவகுத்துநிற்க, தமிழர்விடுதலைக்கூட்டணியின் கொடியை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் ஏற்றிவைப்பார். கொடி வணக்கம் முடிந்ததும், வரவேற்புரையை கோப்பாய் எம். பியும், மாநாடு வரவேற்புக் குழுத்தலைவருமான திரு. சி. கதிரவேலுப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார்.

காலை 10-00 மணிக்கு தொழிலாளர் விவசாயிகள் மாநாடு அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அரங்கில் ஆரம்பமாகும். இம் மாநாட்டுக்கு பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம் தலைமைவகிப்பார். கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம், திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், திருவாளர்கள் வீரசுப்பிரமணியன், சி. க. சிறீதரன் ஆகியோர்கள் உரையாற்றுவர். இதேநேரத்தில் விஷய ஆலோசனைக்கூட்டமும் நடைபெறும்,

பிற்பகல் 2-00 மணிமுதல் இளைஞர்பேரவை மாநாடு அமரர் சிவகுமாரன் அரங்கில்

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாண ரூேயல் டிஸ் பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர்கள்உடன் தேவை நேரில் வரவும். 9867

கடிகாரம் திருத்தும் ஸ்தாபனத்திற்கு நன்ருகத் தொழில் தெரிந்த ஒருவர் தேவை. 1-8-78க்கு முன் எழுத்துமூலம் அல்லது நேரில் விண்ணப்பிக்கவும். தொழில் பழக ஆர்வமுள்ள பெண் பயிலுநர்கள் தேவை. வேல் வோச் வேக்ஸ், 143, பிரதானவீதி, சங்கானை. 9904

## வெற்றுச் சாக்கு

6000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. கேள்விப் பத்திரம் மீளளிக்கப்படாத ரூபா. 2/- கட்டி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ரூபாய். 100/- வைப்புப் பணம் செலுத்தவேண்டும். முடிவு திகதி 7-08-1978,

வள்ளத்தில் கழற்றிய செப்புத் தகடுகளும் கேள்விப் பத்திரமூலம்விற்பனைக்குண்டு.

**பொது முகாமையாளர்**

பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
9900 பூநகரி.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

**இ. சிவசுப்பிரமணியம்**
சட்டத்தரணி & நொத்தாரிஸ்
திருநெல்வேலி தெற்கு
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் இல. 130, பருத்தித்துறை ரூேட்டில் வசிக்கும் மரண சாதனமெழுதாது இறந்த சுப்பிரமணியம் சிவானந்தத்தின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

சிவானந்தன் கைம்பெண் சுகிர்தம்மா,
இல. 130, பருத்தித்துறை ரூேட்டு, யாழ்ப்பாணம்.
—மனுதார்.

மரண சாதன
நியாயாதிக்கம் இல. 3388

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வசிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின் உறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1978ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ஆந் திகதி முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின் உறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்:
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.
1973-7-24. 9889

## மரம் அரிவு

அனுபவம் உள்ள கை அரிவு இரண்டு கூட்டம் கொட்டடி மரக்காலைக்கு உடனே தேவை. நேரில் சமுகம் தரவும். 9898

CEYLON SPINNING & TEXTILE MILLS LTD
VALLAI

## இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை (வரைவுள்ளது) வல்லை

ஒரு இலட்ச ரூபா பெறுமதியான பங்குகள் விற்பனைக்குண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**வீரகத்திப்பிள்ளை இராஜசேகரம்**
தொண்டமாறு.
9901

ஏர் சிலோன் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

## கேள்வி அறிவித்தல்

கொழும்பு (1)

கீழ்ச்சதாம் வீதியில் ஏர் சிலோன் லிமிட்டெட், கேள்விப்பத்திர சபைத் தலைவரால் கீழ்க்காணும் கேள்விக்கான கேள்வி விண்ணப்பங்கள் ''சீல்'' வைத்த உறைகளில் ஏற்கப்படும்.

(அ) 20 பிரயாணிகள் செல்லக்கூடிய ஆசன வசதியுள்ள மோட்டார் ரதம் யாழ்ப்பாணம் ஏர் சிலோன் அலுவலகத்திலிருந்து பலாலி விமான நிலையத்திற்கு ஏற்றிச் சென்று திரும்புவதற்காக வாடகைக்குத் தேவைப்படுகிறது. தினசரி மூன்று அல்லது நான்கு பயணங்கள் உண்டு.
(ஆ) சென்று திரும்புவதற்கான பயணம் ஒன்றிற்கான விகிதம் --- ரூ. 75/-
(இ) வாகனம் தேவைப்படக்கூடிய காலவரை சுமார் ஒரு மாதம்.
(ஈ) தேவைப்படும் திகதி --- 1978 ஆகஸ்ட் 10-ந் திகதி.
(உ) கேள்வி விண்ணப்பங்கள் முடிவுறும் காலம் 1978, ஆகஸ்ட் 4-ந் திகதி முற்பகல் 10 மணி.

மேல் விபரங்களுக்கு- தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

நிலைய முகாமையாளர்,
**ஏர் சிலோன் லிமிட்டெட்,**
இல. 17, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

இல. 17, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 288
நேரடித் தொடர்பு: 7636 9905

# "1984-ல் நவீனமின்தறியை உலகுக்கு செக். வழங்கும்"

## கருத்தரங்கில் நிபுணர் தகவல்

(யாழ்ப்பாணம்)

'யாழ்ப்பாணத்தில் நெசவாலைகளில் உற்பத்தியாகும் நைலோன் சாறிகள், பழமைவாய்ந்த மின்தறி இயந்திரங்களினுல் செய்யப்படுவதனுல் மெதுமை குறைந்து காணப்படுகின்றது. பெட்ரோலியம் பொருளான நைலோன் நார்களில் உள்ள எண்ணெய்ப் பசையே இதற்குக் காரணம். நவீனமயப்படுத்தப்பட்ட நீர்ச் சக்தியைப் பயன்படுத்தும், 'ஹைட்ரூேலிக் பவர் லூம்' மூலம் இங்கு நைலோன் சாறிகளை உற்பத்தி செய்தால் சிங்கப்பூர் நைலக்ஸ் சாறிகளை போல் இங்கு சாறிகளைத் தயாரிக்க முடியும்'

இவ்வாறு செக்கோஸ்லவாக்கிய புடவை நிபுணர் பேராசிரியர் ஊர்பன் கூட்டுறவாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. ச. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் ஊர்பன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'செக்கோஸ்லவாக்கிய புடவை உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளதுடன் மின்தறி யந்திரங்கள் உற்பத்தியிலும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. எமது நாட்டின் மின்தறி உற்பத்தி நிறுவனமான யூட்டாஸ், 1984-ல் புதிய யந்திரம் ஒன்றை வர்த்தக சந்தையில் அறிமுகம் செய்து வைக்கவிருக்கிறது. இம்மின்தறி ஒரே நேரத்தில் பல புடவைகளை உற்பத்தி செய்யும். இதற்கான ஓடர்களை அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் எமக்கு இப்போதே அனுப்பியுள்ளன.

'நான் செக்கோஸ்லவாக்கியா சென்றதும் எமது பிரதிநிதியாகிய புரூே மோட்டோர்ஸ் நிறுவனத்துக்கு நீர்ச்சக்தியைப் பயன்படுத்தும் ஒருமின்தறியந்திரத்தை இலவசமாக எமது செலவில் அனுப்பிவைப்பேன். இதன் விலை இலங்கை நாணய மதிப்பின்படி 1,25,000 ரூபாவாகும். இதன்பின்னரே இத்தறிகளின் செயல்பாடுகளையும், தன்மையையும் உற்பத்தித் திறனையும் இங்கு உணரமுடியும்.

''யாழ்ப்பாண நீர் சற்றுக் காரம் நிறைந்ததாக இருந்தாலும் இக்காரத்தன்மை, தொடர்ந்த நீர்ப்பயன்பாட்டால் நல்லநீராகமாறும். இதற்காக, நாம் உங்களுக்கு எமது தொழில் நுட்பநிபுணர்களை இங்கு அனுப்பி சேவையாற்றுவோம். இதற்கு யாரும் அஞ்சவேண்டியதில்லை.''

இக்கருத்தரங்கை கூட்டுறவு இலாகாவுடன்இணைந்து யாழ். புரூே மோட்டோர்ஸ் நிறுவன இயக்குநரும் பொறியியலாளருமான திரு. என். சிவகுமாரன் ஏற்பாடு செய்திருந்தார்.

கூட்டுறவுஆக்க உதவி ஆணையாளர் திரு. சண்முகலிங்கம் தலைமை வகித்து உரையாற்றுகையில், ''கூப்பன் முறை ரத்துச்செய்யப்பட்டுள்ளதால் வடபகுதிக்கூட்டுறவாளர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டியவர்களாக உள்ளனர். இதற்கு இப்படியான கருத்தரங்கு மூலம்நல்ல பயனை அடைய முடியும்'' என்ருர். (கெ-அ)

## கேள்வி விளம்பரம்

மல்லாகம் கிராமசபை நிர்வாகஸ்தரால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு 9-08-78ம் திகதி முற்பகல் 10 மணி வரை முத்திரை இடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலை விபரம்:
1. தேரீட்டி ஒழுங்கைக்குக் கல்லிட்டுத் தார் இடுதல்.
2. கேணிப்பிட்டி சுடலை ஒழுங்கைக்கு கல்லிட்டுத் தார் இடுதல்.

கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம், கேள்விப்பிணைப் பணம் ரூபா 50/-ம் இவ்வலுவலகத்தில் 8-08-78ம் திகதி பிற்பகல் இரண்டு (2-00) மணிவரை செலுத்தி உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**க. மகாதேவா**
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
மல்லாகம்.
கிராமசபை அலுவலகம்,
மல்லாகம்.
25-07-78. 9903

## கேள்வி விளம்பரம்

### பண்டத்தரிப்பு பட்டணம்

பண்டத்தரிப்பு பட்டண விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு 16-8-78 காலை 10-00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் 14-8-78 பி. ப. 2-30 மணிவரை வழங்கப்படும்.

1. சேரி ஒழிப்புத் திட்ட நிர்மாண வேலை.
   கேள்விப் பத்திரக் கிரயம் ரூபா. 25/-
   கேள்விப் பிணைப் பணம் ரூபா. 250/-

மற்றும் விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. ஞானசேகரம்,
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு
பட்டணசபை
பட்டணசபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு. 25-7-78.
9906

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீமத்வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று அம்பாள் திருவிழா, கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. பகல் 9-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், பகல் 10-15 மணிக்கு கொடியேற்ற வைபவமும் மாலை 4-00 மணிக்கு மகாயாக ஆரம்பமும், மாலை 6-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், பின் அம்பாள் கைலாச வாகனத்தில் திருவீதிவலம் வருதலும் நிகழும். (அ)

......

## மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். பிரதம விருந்தினராக சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபர் திரு. கே. அருணசலம் கலந்து கொள்வார். (உ)

இவ்வார

## உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீகின் ஆதரவில். யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இவ்வார உதைபந்தாட்டப் போட்டிகளின் விபரம் வருமாறு:

இன்று யாழ். கிறீன்பீல்ட் கழகமும் கொக்குவில் பொற்பதி கழகமும் 'ஏ' பிரிவில் மோதும்.

நாளைய ஆட்டத்தில் 'பி' பிரிவில் சென் மேரிஸ் எதிர் யுத்காமல், 'ஏ' பிரிவில் சென் மேரிஸ் எதிர் பாடும்மீன்.

ஞாயிறு ஆட்டத்தில் 'பி' பிரிவில் சென் நிக்கிலாஸ் இளைஞர் எதிர் அரியாலை ஐக்கிய கழகம் 'ஏ' பிரிவு மோதலில் சென். அன்ரனிஸ் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் (இ)

மானிப்பாய்

## ஐ.தே.கிளைகளை ஒருங்கிணைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரித் தொகுதி ஐ. தே. கட்சி மத்திய கிளையைப் பின்பற்றி மானிப்பாய் தொகுதியிலுள்ள ஐ. தே. கட்சிக் கிளைகளை ஒருங்கிணைப்பது சம்பந்தமான ஆலோசனைகளை நேரில் கேட்டறிந்து செயல்படுவதற்கு மானிப்பாய் தொகுதியைச் சேர்ந்த நீண்டகால ஐ. தே. கட்சி அங்கத்தவரான பிரபல சட்டத்தரணி தலைமையில் ஒரு குழு, ஐ. தே. கட்சி தலைமைப்பீடமான ''ஸ்ரீகொத்தா''வுக்கு நேற்று சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. (அ)

# காந்தி நேரு அண்ணு கொள்கைகளை பரப்ப எம். ஜி. ஆர். முயற்சி

சென்னை, ஜூலை, 27 மகாத்மாகாந்தி, ஜவஹர் லால் நேரு பேரறிஞர் அண்ணு ஆகியோரின் அறிவுரைகளை தமிழகத்தின் கிராமங்களில் தோறும் பரப்புவதற்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தீர்மானித்துள்ளார்.

கிராமப் பகுதிகளில் இக் கொள்கைகளைப் பரப்ப பாடசாலைகளையே திரு. இராமச்சந்திரன் தேர்ந்தெடுத்திருக்கிருர். (இ)

ஈழநாடு
The Eelanaadu

## இளைஞர்களும் சினிமாவும்

"தமிழ் ஈழ நடவடிக்கைகள்பற்றி அறிந்துபோவதற்காக சுவிற்சர்லாந்திலிருந்து இங்கு வந்திருந்த ஒரு இளைஞன் நமது இளைஞர்கள் சினிமாத் தியேட்டர்கள் முன் குவிந்து நிற்பது கண்டு ஆச்சரியப்பட்டான், இந்தநிலை மாறவேண்டும்."

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் சென்ற சனிக்கிழமை நடந்த கருத்தரங்கில் பேசிய வணபிதா. எஸ். சர்வானந்தன் மேற்கண்ட குறிப்பைக் கவலையோடு தெரிவித்திருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன் வெளிநாட்டிலிருந்து ஒரு தூதுக்குழு வந்திருந்தது. இலங்கையில் பஸ் போக்குவரத்துச் சேவையை மேலும் சீராக்குவதற்காக பஸ்கள் இறக்குமதி செய்வது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த இத்தூதுக் குழுவினர் கொழும்பு நகரின் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர்.

சினிமாத் தியேட்டர்களின் முன்னும் பஸ் தரிப்புக்களிலும் பஸ் நிலையங்களிலும் எந்த நேரமும் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததைக் கவனித்த தூதுக்குழுவின் உறுப்பினர் ஒருவர், தங்களுடன் வந்திருந்த இலங்கை அரசின் உயர் அதிகாரியிடம், "உங்கள் அரசாங்க அலுவலகங்களின் நாளாந்த வேலை நேரம் என்ன?" என்று கேட்டார்.

"காலை 9 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை" என்று பதில் வந்தது.

பாடசாலை நேரம்; சாய்ப்புச்சட்டம் பற்றிய நேர விபரங்களையும் அந்த உறுப்பினர் கேட்டுத் தெரிந்து கொண்டபின் அவர் இறுதியில் கேட்ட ஒரு கேள்வி,

"உங்கள் நாட்டில் வேலையில்லாதவர்கள் அதிகமோ!" என்பதுதான்.

சினிமாத் தியேட்டர்களிலும் வீதிகளிலும் சோம்பித் திரிபவர்கள் அதிகம் என்பதுதான் அவரின் கேள்வியின் அர்த்தம்.

நாடு முன்னேறவேண்டும், சமூகம் முன்னேற வேண்டுமென்றால் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் காலத்தையும் நேரத்தையும் வீணாக்கக் கூடாது.

உழைத்துக் களைத்தவர்களுக்கு ஓய்வு தேவைதான். பொழுதைச் சிறிது களிப்பதற்காகச் சினிமாப் பார்ப்பதில் தவறில்லை.

ஆனால் தியேட்டர் வாசல்களில் அதிகாலையிலிருந்தே குவிந்து நிற்கவேண்டியதில்லை. கொழும்பு நகரிலுள்ள தியேட்டர்களில் கிழமை நாட்களில் இப்போது மூன்று காட்சிகள் தான் காண்பிக்கப்படுகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர்களில் தினமும் நான்கு காட்சிகள். புதிய படமென்றால் அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரை பல காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

சீனா, ஜப்பான் மற்றும் பல நாடுகள் கைத்தொழிலிலும் விவசாயத்திலும் மற்றும் பல துறைகளிலும் முன்னேற்றம் பெற்றுள்ளன.

அந்தநாடுகளில் சினிமாத் தியேட்டர்களுக்கு முன் நாள்முழுதும் இளைஞர்களும் பெண்களும் கூடி நிற்பதையோ படம் பார்த்தபின் நடிக நடிகையரைப் பற்றிப் பேசி சர்ச்சை செய்வதையோ காணமுடியாது.

நமது சமூகம் முன்னேற வேண்டுமானால் வண. பிதா சர்வானந்தன் கூறுவது போல், சினிமாத்தியேட்டர்களுக்கு முன் திரண்டுநிற்கும் நிலைமையை மாற்றி இளைஞர்கள் தம்மைத்தாம் பக்குவப்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும்.

ஆனந்தகுமாரசுவாமி நூல் வெளியீடு நாளை

# கலாயோகி சரித்திரம் பாடபுத்தகமாதல் நன்று

வேதம் வல்ல மகாமுனிவர்களின் வழிவழிவந்தது-சனதனமானது பாரதகலாசாரம். அவ்வாறாகிய கலாசாரத்துக்குத் தம்மை அர்ப்பணிக்கும் ஆராமைப்பாடு மிக்கவர் ஆனந்தகுமாரசுவாமி.

தம் காலத்தில் வாழ்ந்த மகாத்மா காந்தியடிகள், இரவீந்திரநாத மகாகவி உட்பட உலக மகாமேதைகள் என்று எண்ணப்படுவார் அனைவரதும் பெருமதிப்பைப் பெற்றவர் ஆனந்த குமாரசுவாமி.

மேலைத்தேச வெள்ளை மாதரசியார் ஒருவர் வயிற்றில் உதித்து, இளம் வயதில் தந்தையாரை இழந்து, மேலைத் தேசத்தில் வளர்ந்து, அத்தேசத்துக் கல்வி கலாசாரங்களில் முழுகித் திளைத்தவராயிருந்தும்,

தந்தையார் திரு. முத்துக்குமாரசுவாமி அவர்களையும், அருமை மைத்துனர்களாகிய சேர். பொன். இராமநாதன், சேர். பொன் அருணசலம் என்பவர்களையும்,

பாரத கலாசாரப் பண்

சைபாகன் அவர்கள், ஆனந்த குமாரசுவாமியின் அருமை பெருமைகளில் ஈடுபட்டு ஆராய்ந்த ஆராய்ச்சியோடு கூடிய சரித்திரம் பத்திரிகைமூலம் தொடர்ந்து வெளிவந்திருக்கின்றது.

பத்திரிகையில் வெளிவந்தவைகள் புத்தக வடிவில் வருவது கேட்டுப் பெருமகிழ்ச்சியுண்டாகின்றது.

நாவலர் பிரபந்தத்திரட்டில் வரும் குமாரசுவாமி,

(இலக்கிய கலாநிதி பண்டிதமணி)
**சி. கணபதிப்பிள்ளை**

பாட்டைத் தலைமேற் கொள்வதில் வென்றுவிட்டார் ஆனந்த குமாரசுவாமி, மேல்நாட்டு நாகரிகம் அவரை எட்டியும் பார்க்கவில்லை.

ஒருமுறை கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள் கலா நிலையத்தில் ஆனந்த குமாரசுவாமியின் படத்தைச் சுட்டிக்காட்டி,

இந்த மகாமேதைக்கு எந்



'கலாயோகி ஆனந்த குமாரசுவாமி' என்ற நூலை எழுதிய சமயப் பெரியாரும், கல்விமானும் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபருமான திரு. ச. அம்பிகைபாகன்.

தக்[கலை]த் துறைதான் வாராது. ஒவ்வொரு துறையிலும் அப்பப்பா! எவ்வளவு தூரம் போயிருக்கின்றார்' என்று கூறித் தலைக்குமேற் கைவைத்து விம்மிதமுற்று நின்றநிலை இன்றும் என் மனக்கண் முன் காட்சியளிக்கின்றது.

கலைப்புலவர் அவர்களைப் பின்பற்றி திரு. ச. அம்பி

ஆனந்தக் குமாரசுவாமியின் தந்தையார் சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களே என்பது குறிப்பிட்ட கட்டுரைகள் மூலம்தான் அறியத்தக்கதாயிருந்தது.

கட்டுரைகளில்,

'இந்தியக் கலைகள் இயற்கையைப் பிரதிபலிப்பவன வல்ல, இயற்கைக்குப் பின்னால் இருக்கும் இறைசக்தியைப் பிரதிபலிப்பதே அவற்றின் நோக்கமாகும்.

'இலங்கையில் அவர்செய்த சேவை, மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கியிருந்த மக்களை எழுப்பி, சகல துறைகளிலும் கல்வி, சமூகம், சமயம் இவற்றிற்கே உயிர்ப்பு நல்கச் செய்தது.

"காந்தியடிகளுக்கு முன்பே சுதேசியத்தைப் பற்றிப் பிரசாரஞ்செய்தார் கலாயோகி அவர்கள்.

"இறுதிக்காலத்தில் தமது பொழுதைச் சமய ஆராய்ச்சிக்கே அர்ப்பணித்தார்கள்.

"இந்தியாவில் முத்திரை வெளியிட்டு வாழ்க்கைச் சரித்திரத்தைப் படமாக்கியிருக்கின்றார்கள். அமெரிக்காவில் கலாநிதி லிப்சே என்பவர் பிறிஸ்ரன் பல்கலைக் கழகத்தில் Ph. D. க்கு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கின்றார். குறித்த சர்வகலாசாலை இரு பெரியவெளியீடுகளில் ஆனந்த குமாரசுவாமியின் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. கட்டுரைகள், சிந்தனைகள் எல்லாம் இறை சம்பந்தமானவை. இறைவனை மறந்ததினாலே தான் உலகத்தார்க்குக் கஷ்டம் ஏற்பட்டது என்று ஆனந்தகுமாரசுவாமியின் நூலுக்கு மதிப்புரை எழுதிய றெயின் என்ற கவியரசி குறிப்பிட்டுள்ளார்' என்கின்ற,

இப்பகுதிகள், சரித்திர நாயகரின் பெருமையும், சிந்தனைகளின் அருமையும் ஓரளவுக்காயினும் புலப்படுதற்கு இங்கே அநுவதிக்கப்பட்டன.

வருங்கால மாணவர் மனதில் திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்களின் அருமந்த சரித்திரம் குடியிருக்க வேண்டும்.

சரித்திரம் உயர்தர வகுப்பு மாணவருக்குப் பாடபுத்தகமாதல் சாலவும் நன்று.

மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பன்மொழிப் புலவர் பேராசிரியர்

### திரு. தெ. பொ. மீ. வாழ்த்துகிறார்

கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் ஈழநாட்டு மறுமலர்ச்சிக்கு உழைத்த அறிஞர். அவர் அதில் ஈடுபடக்கூடிய இளைஞர்களைத் திரட்டினர். அத்தகைய குழுவில் சிறந்த இடம் பெற்றவர் திரு. அம்பிகைபாகனார். கல்வித்தொண்டாற்றி ஓய்வு பெற்றபின்னரும் வாளாவிராமல் தமிழ் எழுத்தாளராய்த் தொண்டாற்றி வருகின்றார். யோகசுவாமிகளைப் பற்றி முன்னர் எழுதினார், இப்பொழுது ஈழத்தில் பிறந்த உலக அறிஞராய் ஓங்கி வளர்ந்த ஆனந்த குமாரசுவாமியை பற்றி கட்டுரைகள் வரைந்து நூலாக வெளியிடுகின்றார். நுனிப்புப் ஆனந்த குமாரசுவாமியை அறிந்து பாராட்ட முடியாது. கிழைப் பண்பாடு, இந்தியப் பண்பாடு, கலையுள்ளம் இவற்றின் நுட்பத்தை உள்ளூர அறிந்தவர்களே அறிந்து கொள்ள முடியும். அத்தகைய வகையில் தம்முள்ளத்தையும் அறிவையும் பண்படுத்திக் கொண்ட அம்பிகைபாகனார் மிகச் சுருக்கமாக, ஆனால் மிகத் தெளிவாக இந்நூலில் விளக்கியுள்ளார், ஆனந்த குமாரசுவாமியின் உள்ளத்தைத் திறந்து காட்டும் திறவுகோலாக இந்நூல்விளங்குகிறது.

வாழ்க ஆனந்த குமாரசுவாமியின் புகழ் வாழ்க கலை. வாழ்க அம்பிகைபாகனார், வாழ்க இந்நூல்.

### நன்றெனவே நாடுவோம் நாம்

ஆயதமிழ் நுண்கலையின் ஆற்றல் பெரிதுணர்ந்தே
மேயமேல் நாட்டார் வியப்பெய்த -- த[வ]ப்பணி
தான்புரிஆனந்த குமாரசாமி தன்புகழின்
மேன்மையினை யாம் உணர இன்று.

தக்க கலாயோகி தன்சீர் தமிழறிஞர்
மிக்க மகிழ்வால் விரும்படவே -- தக்சநூல்
ஒன்றுதரு அம்பிகை பாகனுயர் தொண்டதனை
நன்றெனவே நாடுவோம் நாம்.

---வ. குகசர்மா

### மணிவாக்கு

நம்கடன்செயலாற்றுதல் தான் பலன் கொடுப்பது கடவுளின் கடன்.

--விப்பிள்

### லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

உசன் கந்தசாமி கோவிலின் லட்சார்ச்சனை இம்மாதம் 23ம் திகதி ஆரம்பமாகியது. கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வரும் இந்த லட்சார்ச்சனை இன்றுடன் (வெள்ளி) பூர்த்தியாகும்.

இன்று பகல் ஆறுமுகப் பெருமானுக்கு அஷ்டோத்தர கலச சங்காபிஷேகமும் இரவு கலைநிகழ்ச்சிகளும் உற்சவமும் நடைபெறும். (ஆனை. அ;

## நாடு நடப்பு

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னால் மாலை நேரங்களில் சிலர் நின்று அப்பாவி மக்களைத் துன்புறுத்துவதாகவும் இளம் பெண்களிடம் குரங்குச் சேஷ்டை விடுவதாகவும் மானிப்பாயைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவர் கவலையுடன் எழுதுகிறார்.

இந்த இடங்களில் இரகசியப்பொலிஸ் கண்காணிப்பு இருந்தால் நல்லதென்பது அவரது ஆலோசனை.

°° °° °°

இளைஞர்களுக்கு ஈரானில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகச் சிலர் இலங்கையில் கூறிப் பணம் வாங்குவதாகக் கேள்விப்படுவதாகவும் விசா இல்லாமல் பாகிஸ்தான் எல்லை வழியாக அல்லது ஈராக் எல்லை வழியாகக் கூட்டிச் செல்வதாகக் கூறுவதாகவும் சட்டவிரோதமான இம்முறையைப் பின்பற்றி எமது இளைஞர்கள் சென்றால் பணச் செலவுடன் ஆபத்துகளிலும் மாட்டிக்கொள்ள நேரிடுமென்றும் ஈரானிலிருந்து ஓர் அன்பர் எச்சரித்து எழுதுகிறார்.

°° °° °°

"இளைஞன்குரல்" என்னும் புதிய பத்திரிகை ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரவிருக்கிறது. தமிழ் இளைஞரின் குரலாக வெளிவரவிருக்கும் இப்பத்திரிகையின் முதற் பிரதியை நாளை சனிக்கிழமை ஆவரங்காலில் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது மகாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டுவைக்கவிருக்கிறாராம்.

தமிழ் இளைஞருக்கு நல்வழி காட்டுவதற்கு இளைஞன் குரல் ஒலிக்குமென எதிர்பார்ப்போம்.

°° °° °°

அடுத்த மாதம் 26-ந் திகதி ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி விழா வருகிறது. அல்வாய் மேற்கு ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி வளவைச் சேர்ந்த திரு. த. க. தேவசிகாமணி என்னும் வானியல் சோதிடர், ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விரதமகிமை என்னும் சிறு பிரசுரத்தை அழகான கண்ணன் படத்துடன் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

°° °° °° °°

பொலிஸ் நிலையத்துக்கு நேரில் சென்று புகார் செய்தாலும் உரிய நேரத்துக்குப் பொலிசார் வருவது அபூர்வமாகவிருந்த யாழ்ப்பாண நகரில் இப்பொழுது 205 இலக்கத் தொலைபேசியில் சுழற்றிப் புகார் செய்ததும் சில நிமிடங்களிலேயே பொலிஸ் ஜீப் வந்து நிற்கிறது,

புதிய பொலிஸ் அதிபர் திரு. எகொடப்பிட்டியாவுக்கு ஒரு சபாஷ்!

-- ஊர்சுற்றி

### மகோற்சவம்

(வட்டுக்கோட்டை)

ஈழத்துச் சிதம்பரத்தில் தேவி மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். ஆகஸ்ட் 5ம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். உற்சவ காலங்களில் தினந்தோறும் மாலையில் ஈழத்துச் சிதம்பர புராணபடன விரிவுரை நடைபெறும். (உ)

# இஸ்ரேல் இராணுவக் குழுவுக்கு 24 மணி நேரவெளியேற்ற உத்தரவு

## எகிப்திய அரசு நடவடிக்கை

கெய்ரோ, ஜூலை 27 எகிப்தில் கடந்த ஆறு மாதங்களாகத் தங்கியிருந்த இஸ்ரேலிய இராணுவப் பிரதிநிதிகள் குழுவை 24 மணி நேரத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு எகிப்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மத்தியகிழக்கு சமாதானம் குறித்து எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் தெரிவித்த யோசனைகளை இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் ஏற்றுக்கொள்ள மறுத்ததை அடுத்தே எகிப்து, இஸ்ரேலிய இராணுவக் குழுவை வெளியேற்றியுள்ளனது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் எகிப்திய அதிபரும் இஸ்ரேலியப் பிரதமரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து மேலும் இராணுவ ரீதியிலான பேச்சு வார்த்தைகளை நடத்தும் பொருட்டு இந்த இராணுவக் குழு எகிப்துக்கு அனுப்பப் பட்டிருந்தது. (இ)

# ஆக்கப்பணிக்கு அணுசக்தி

## தேசாய்லோகசபையில்உறுதி

புதுடில்லி, ஜூலை 27 சுரங்க வேலைகள், எண்ணை அகழ்வு வேலைகள் ஆகிய பணிகளின்போது பாறைகளை வெடி வைத்து தகர்ப்பதற்கு அணுசக்தியைப் பயன்படுத்த எதுவித தடையும் கிடையாது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய லோகசபையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

ஆக்கப்பணிகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது நிறுத்தப்படவுள்ளது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் திரு. தேசாய் கூறினர். (இ)

## எம். ஜி. ஆரின் வருமானவரி பாக்கி

புதுடில்லி, ஜூலை 27 தமிழக முதல்வரும் புரட்சி நடிகருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமது வருமானவரிப் பாக்கிகள் முழுவதையும் செலுத்திவிட்டார்.

இத்தகவல் நேற்று லோகசபையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## கிருபளானி-சரண்சிங் சந்தித்தனர்

புதுடில்லி, ஜூலை 27 முன்னுள் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் நேற்று புதுடில்லியில் ஆச்சார்யா கிருபளானியைச் சந்தித்து உரையாடினர்.

இன்றைய அரசியல் நிலை, ஜனதா கட்சி நெருக்கடி ஆகியன பற்றி இவர்கள் கலந்துரையாடினர். (இ)

# முதலாளித்துவ அமைப்பில் இந்தியாவின் நிலை

திருச்சியிலிருந்து தனியார் துறைக்குச் சொந்தமான பஸ் மூலம் தமது சென்னைப் பயணத்தை ஆரம்பித்தார் வி. பி. 25-ம் திகதி காலை சென்னை மாநகரத்தை அடைந்தார். சினிமா ஸ்ருடியோ ஒன்றில் 'கமரா மேனுக'ப் பணிபுரியும் திரு. த. ஜெயசிங்கம் என்பவர் இவரை அன்புடன் வரவேற்றுத் தமது இல்லத்தில் தங்கவைத்து உபசரித்துடன் சகல இடங்களுக்கும் அழைத்துச் சென்று உதவிபுரிந்தார். அவரது இல்லம் சிவாஜி முதலான புள்ளிகள் போன்றோர் குடியிருக்கும் போக் ரோட்டில் அமைந்துள்ளது. எந்நேரமும் அங்கு கார்கள்.

வீதிகளில் அவர் கண்ட காட்சிகள்...

அன்று கண்ட அதே காட்சிகள்!

அவர் மனதில் துன்பம் ஊற்றெடுக்கிறது. சே! 'என்றும் இந்நிலை இந்தியாவில் [மாருதா? '--உள்மனசு அழுகிறது.

வி. பி. யின் இந்திய பயண அநுபவங்களை

கேட்டு எழுதியவர்:

இணுவை. ந. சண்முகப்பிரபு

தெருவாழ்க்கை--

ஆமாம், இந்தியாவில் மனிதன் தெருவாழ்க்கை நடத்துகிறன். பெட்றூம், டைனிங்றூம் டிரெஸிங்றூம் எனப்படுகின்ற சயனஅறை, சாப்பாட்டு அறை, உடையலங்கார அறை, மற்றும் சமையலறை இத்தாயாதியெல்லாம் அவனுக்கு வீதியில்தான். வானமே அவனுக்குக் கூரை. வானக் கூரையிலே குமிழ் குமிழாக எத்தனை பல்புகள் பிரகாசிக்கின்றன. நீண்டசாலைகளை நெடும்பாயாகக் கொண்ட இந்தத் தெருக்குடித்தனக் காரரைத் தவிர வேறுயார் இந்த இயற்கையை அனுபவிக்கப் போகிருர்கள். ஆனல் சோ வென மழைகொட்டும்போதும், நெருப்பாய்வெயில் தகிக்கும்போதும் அந்த ஒன்றுமறியாத-- உலகின் ஏற்றத்தாழ்வுகளைத் தெரிந்து கொள்ள முடியாத- குழந்தைகளை நினைக்கும் போது-

வி. பி. அழுதே விட்டார்.

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்' என்று பாடிய பாரதி நடந்த மண்ணு இந்த நிலம்? --வி. பி. யின் நெஞ்சப்பறையில் இக் கேள்வி எதிரொலித்தது.

## பாரதத்தில் பன்னிரு நாட்கள் (3)

இந்த வாழ்க்கை கண்ணராவியானது என்பதைத் தவிர இவ்வித வாழ்க்கை நாட்டில் எத்தனை பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துமென்பது அடுத்த பிரச்னை. நாட்டின் சுகாதாரம் இதனல் பாதிக்கப்பட்டு அனர்த்தங்கள் விளையும். அரசு தெருக்களில் மலகூடங்களை அமைத்திருந்தும் இம் மக்கள் இதனைப் பயன்படுத்தாமை அறியாமையே. நமது நாட்டில் இவ்வித நிலை வெகுகுறைவாயிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆயினும் யாதும்ஊரே யாவரும் கேளிர் அல்லவா? அடுத்த வீடு தீப்பற்றி நமது வீடுமட்டும் தப்பினுல் அதற்காக மகிழ்ச்சியடையலாமா? இன்னுமே நமது சகோதர மக்கள் சுகாதார வெளிச்சத்தைக் கண்திறந்து பார்க்காதது வி.பி. யின் உள்ளத்தில் வேதனையை அளித்தது.

திருச்சி பஸ்நிலையத்தில் தாம் கண்ட ஒரு காட்சியைப் பற்றி வி. பி. எடைபோட்டு அது ஒரு நல்ல முறைஎன்று முடிவு செய்கிருர். மக்கள் நெரிசலுள்ள பட்டினப்பகுதிகளுக்கு இம்முறைசிறந்தது.

திருச்சி பஸ் நிலையத்தில் சற்று ஒதுக்குப் புறமாக ஒரு 'கியூ' நிற்கிறது. என்ன கியூ?என்று பார்த்ததால் தான் விஷயம் புரிந்தது வி. பி.க்கு.

மாநகர சபையால் கட்டப்பட்டு நிர்வகிக்கப்படும் அந்த பஸ் நிலையத்தில் காணப்பட்ட சுத்தமும் ஆச்சரியத்துக்குரியதாகப் 'பளிச்' சென்று விளங்கியமைக்கான காரணமும் புரிந்தது அப்போதுதான்.

கியூவில் நின்றவர்களுக்கு ஒவ்வொரு 'ரிக்கற்' வழங்கப்பட்டது. பலர் ஒரே நேரத்தில் அனுமதிக்கப்பட்டனர். வேறெதற்கு? மலசல கூடத்துக்குச் செல்வதற்கே அந்த 'ரிக்கற்' இது ஒரு நல்ல முறை- இடமும் சுத்தமாக 'பளிச்' சென்று இருந்தது. உள்ளூராட்சி மன்றங்கள் இந்த நல்ல உதாரணத்தைப் பின்பற்றுமா? கே. ஆர். விஜயா, சிவாஜி போன்ருேர் வாழும் 'போக் ரோடில்' தான் பெரும் பணக்காரர்களையும், பெரும் ஏழைகளையும் காணலாம்.

[6ம் பக்கம் பார்க்க]

# 'ஈழம் ஆராய்ச்சி' மகாநாடு லண்டனில் நடைபெறுகிறது

## ஈழத்தமிழர்வரலாறு, பொருளாதாரவளம் எதிர்காலம்பற்றிபலநாட்டுநிபுணர்ஆராய்வர்

லண்டன், ஜூலை. 27 ஈழத்தமிழர் விஞ்ஞானப் பேரவையினர் ஒழுங்கு செய்த முதலாவது ஈழ ஆராய்ச்சி மாநாடு லண்டனில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் இம் மாநாட்டில் ஈழத் தமிழரின் வரலாறு, பொருளாதாரம், தமிழ்ப்பிரதேச புவியியல் வளம், எதிர்காலம், தமிழரின் சமூகவியல் ஆகிய துறைகளில் நிபுணர்களாக உள்ள பல உலக நாட்டு ஆய்வாளர்கள் கலந்துகொள்கின்றனர்.

ஆங்கிலத்திலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகள் அமைந்திருக்கும்.

லண்டனில் உள்ள தமிழர் மன்றங்கள், தமிழ் இயக்கங்கள் இதற்கு ஆதரவளித்துள்ளன.

பெரும்பாலான உலக நாடுகள் அனைத்திலும் அந்தந்த நாட்டு இன மக்களுக்காக இருப்பதைப் போல உலகில் வாழும் பலகோடி தமிழ் மக்களுக்கும் வழிகாட்டுவது போல ஆரம்பிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர் விஞ்ஞானப் பேரவையே இம்மாநாட்டை முன்னின்று நடாத்துகின்றது.

## ஹரிஜனப் பெண்கற்பழிப்பே சாதிக்கலவரத்துக்குகாரணம்

சென்னை, ஜூலை, 27 தமிழ்நாடு விழுப்புரத்தில் ஒன்பது பேரைப்பலிகொண்ட சாதிக்கலவரம், கற்பழிப்புச் சம்பவம் ஒன்றை அடுத்தே இடம்பெற்றதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மரக்கறி விற்பனைசெய்யும் ஹரிஜனப் பெண் ஒருவரை உயர்ஜாதி இந்துவாலிபர் ஒருவர் கற்பழித்ததை அடுத்தே இச்சாதிக்கலவரம் மூண்டது.

இக்கலவரத்தில் ஒரு இறைச்சிக்கடை, தேநீர்க்கடையுடன் 18 குடிசைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் 90 பேர் தொடர்ந்து காவலில்

(5-ம் பக்கம் பார்க்க)

## மேற்கு ஜோர்தானில் இஸ்ரேலிய இராணுவம்

### அதிபர் சதாத் இணக்கம்

டெல்அவிவ், ஜூலை, 27 ''ஜோர்தான் நதியின் மேற்குப்புறத் தீரத்தில் இஸ்ரேலிய இராணுவம் இருப்பதற்கு எகிப்திய ஜனதிபதி சதாத் இணங்கியுள்ளார். இப்பகுதியில் இஸ்ரேல் ஏற்கனவே நிறுவிய இராணுவக் குடியிருப்புகள் தொடர்ந்தும் இருப்பதற்கும் சதாத் சம்மதித்துள்ளார்'' என ஜெரூஸலம் போஸ்ட் பத்திரிகை எழுதியுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் ஜனதிபதி சதாத் இஸ்ரேலிய பாதுகாப்பமைச்சர் திரு. வைஸ்மனிடம் கையளித்த புதிய சமரசத் திட்டத்தின் முக்கிய பகுதிகளை ஜெரூஸலம் போஸ்ட் பிரசுரித்துள்ளது.

இது பற்றி கெய்ரோ பத்திரிகையான 'அக்டோபர்' எழுதுகையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

''கெய்ரோ இஸ்ரேலினதும் வாஷிங்டனினதும்நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்துள்ளமையேசதாத்தின் புதிய சமரசத் திட்டம் காட்டுகிறது. மத்தியகிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினை விலக்கிவைப்பதற்கு ஜனதிபதி சதாத் இணங்கியுள்ளதன் மூலம் றபாத்திலும், அல்ஜியர்ஸிலும் நடைபெற்ற அரபு நாடுகளின் தலைவர்களினது உச்சிமகாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒரு தலைப்பட்சமாக மீறியுள்ளார்''. (இ)

## 225 பேர் வெள்ளத்துக்குப் பலி

புதுடில்லி, ஜூலை 27 வட இந்திய மாநிலங்களில் வெள்ளத்துக்குப் பலியானேரின் தொகை 225 ஆக அதிகரித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் மட்டும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 7ஆயிரம் கிராமங்களில் பாதிக்கப்பட்ட 32 லட்சம் மக்களில் 149 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

**பாகிஸ்தானில்-...**

இதே வேளையில் பாகிஸ்தானிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 25 பேர் வரையில் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஹரிஜன ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் தீய சக்திகள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Last Few Days
Peter Fonda,
DIAMOND
MERCENARIES

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
உறவுசொல்லஒருவன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை
முடிப்பவன்
(புதிய- பிரதி கலர்)

# யாழ். மாவட்டத்தில் மரம் நாட்டு விழா

(உருத்திரபுரம்)

கிளிநொச்சித் தொகுதியின் வட்டாரப் பாடசாலைகளுக்கான மரம்நாட்டுவிழா கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். ஆர். மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

தற்போது கிளிநொச்சியில் வரட்சி காலமாகையால் இக் காலத்தில் வளர்ச்சியடையக் கூடிய மரங்களை மட்டுமே மகா வித்தியாலயத்தில் நாட்டிவைத்தனர்.

கிளிநொச்சியில் இம்மர நாட்டுதல்ஆவணி புரட்டாதியில் மழை பெய்யுங்காலங்களில் தொடர்ந்து வட்டாரப் பகுதியில் உள்ள சகல பாடசாலைகளிலும் நடைபெறும் என்று மேற்படி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். ஆர். மயில்வாகனம் கூறினுர்.

இவ்விழாவில் கிளிநொச்சி பெற்ருேர் ஆசிரியர் சங்க சம்மேளனக் காரியதரிசி திரு. இ. கிருஷ்ணராசா உட்பட பாடசாலை ஆசிரியர்களும் பெற்ருேர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (உ)

### கொழும்புத்துறையில்

(யாழ்ப்பாணம்)

'மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் மரம் ஒன்ருகிவிட்டது. அன்றியும் அழிந்து வரும் மர இனங்களைப் பாதுகாக்கவும், மழை வளத்தைப் பெருக்கவும், மரங்களை நாட்டி வைப்பது மிக அவசியமாகி விட்டது' இவ்வாறு கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற மரம் நாட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்படி வித்தியாலய அதிபர் திரு. இரா. செல்வராசா குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. எஸ். எம். நவரத்தினம் 'உண்டி கொடுப்பதும் உயிர் கொடுப்பதும் தருவே,' என்ற தத்துவப் பொருளை விளக்கிக் கூறினுர். அடுத்துப் பேசிய ஆசிரியை திருமதி எஸ். சிவயோகநாதன் 'நாங்கள் மரங்களை நாட்டி விட்டால் போதாது, அவற்றைப் பேணிப்பாதுகாத்து வருங்காலச் சந்ததியினர் அதன் பயனைப் பெறுவதற்கு அயராது பாடுபட வேண்டும்' என்ருர். (உ)

### இந்துவில்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைஇந்து மகா வித்தியாலயத்தில் மரம்நாட்டு விழா நடைபெற்றது. இவ் விழாவுக்கு அதிபர் திரு. பொ. ஏரம்பு தலைமை தாங்கினுா. ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு பற்றினர்.

செல்வி மேரிபூபதி ஆசிரியை 'நாட்டின் வளங்களும் அவற்றைப் பாதுகாத்தலும்' என்னும் பொருள்பற்றியும், திரு, பொ. சண்முகநாதன் ஆசிரியர் 'வடமாகாண வளங்களும் அவற்றின் உபயோகங்களும்' என்னும் பொருள்பற்றியும் உரை நிகழ்த்தினர்.

பாடசாலை வளவில், ஆசிரியர்களும் மாணவர்களும் பல பழந்தரும் மரங்களையும் வன பரிபாலன இலாகாவால் வழங்கப்பட்ட சஞ்சீவி மரங்களையும் நாட்டினர். பாடசாலை மாணவர்களின் தேசீய கீதத்துடன் விழா முடிவுற்றது, (உ)

### காங்கேசன்துறையில்

(மாவிட்டபுரம்)

அரசின் மரநடுகை இயக்கத்தை முன்னிட்டு காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையிலும் மரநடுகை இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தொழிற்சாலை சேமநல உத்தியோகத்தர் திரு. அன்ரன் அண்ணுசாமிப்பிள்ளை தலைமையில் நடந்த இவ்வியக்கத்தை தொழிற்சாலை பிரதி முகாமையாளர் திரு. எஸ். ஈ. பீ. தனேந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

சமய ஆராதனைகளின்பின் தொழிற்சாலை வளவுகள், சுற்றுப்புறங்கள், குடியிருப்புப் பகுதிகள் தோறும் மரங்கள் நாட்டப்பட்டன. (உ)

### உரும்பராயில்

(உரும்பராய்)

'நம் நாட்டில் வளத்தைப் பெருக்க பயன் தரும் மரங்களை நாட்டுதல் அவசியம். இன்று இந்த நோக்கத்தின் அடிப்படையில் இலங்கை முழுவதும் மரம் நாட்டு விழா நடைபெறுகின்றது.

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்ற மரம்நடும் இயக்க விழாவில் உரையாற்றிய ஆசிரியர் திரு. செ. சின்னத்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளையின் தமிழ் மொழி வாழ்த்துடன் ஆரம்பமான விழாவுக்கு வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு அ. பஞ்சாட்சரம் தலைமை தாங்கினுர்.

ஆசிரியர்கள் திருவாளர்கள் து. சிவசுப்பிரமணியம் இ. நாகலிங்கம் த. சிவசுப்பிரமணியம், திரு ஞா. சிவசுப்பிரமணியம் ஆகியோர்கள்

மருத்துவ மாதர்

# சேலைக்குப் பதில் கவுண் அணிய அங்கீகாரம்

(பண்டத்தரிப்பு)

மருத்துவமாதர்கள் இவ்வருடம் தொடக்கம் சேலைகளுக்குப் பதிலாக கவுணை சீருடையாக அணிவதற்கு சுகாதார இலாகா அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சீருடையாக தங்களுக்கு சேலைகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக கவுண் வழங்கவேண்டும் என்று அரசாங்கமருத்துவ மாதர்சங்கம் நீண்டகாலமாக சுகாதார இலாகாவைக்கேட்டு வந்ததற்கிணங்க இந்த அங்கீகாரம் கடந்தவாரம் வழங்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார இலாகா தலைமைப்பீடம்வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த ஆண்டு மாத்திரம் மருத்துவமாதர்கள் தங்களது சொந்தச் செலவில் இக் கவுண்களைத் தைத்து அணிய வேண்டுமென்றும். 1979ம் ஆண்டில் கவுண் தைப்பதற்கு தேவையான துணிகள் அரசினரால் இலவசமாக வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

மாணவர்களின் பலத்த கரகோஷத்துக்கிடையே பலவித மரங்களை நாட்டினர். (உ)

### சித்தன்கேணியில்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் கழகத் தலைவர் திரு. தெ. மனோகரன் தலைமையில் கழக முன்றலிலும், சந்தியிலும் வீதி ஓரத்திலும் மரங்களை நாட்டினர்.

### வரணியில்

(யர்ழ்ப்பாணம்)

'மரங்களை நாட்டுவதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதோடு மழையையும் நிழலையும் நாம் பெறுவதற்கு வழி வகுக்கும்.'

வரணி மகா வித்தியாலயத்தில் நடந்த மரம் நாட்டு விழாவில் பேசிய விவசாய கழகத் தலைவியும், விவசாய ஆசிரியையுமான திருமதி ப. செல்வராசா மேற்கண்டவாறு கூறினுர்.

அதிபர் பொ. கந்தையினுர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருமதி ப. செல்வராசா மேலும் பேசுகையில், அரசின் முதலாவது ஆண்டு பூர்த்தியையொட்டி ஜனுதிபதியின்வேண்டுகோளைத் தொடர்ந்து, நாடு பூராவும், இன்று மரங்கள் நாட்டுவதாகவும், இந்த மரம்நாட்டு விழா மாணவர்களை, உணவு உற்பத்தியிலும், விவசாயத்திலும் ஊக்கமடையச் செய்யுமென்றும் கூறினுர்.

வித்தியாலய வளவில் தென்னை, வேம்பு, முருங்கை, வாழை ஆகிய மரங்களை, நாட்டினர். இம்மரம் நாட்டு விழாவிற்கான ஏற்பாட்டை விவசாயக் கழக மாணவர்கள் செய்திருந்தனர். (உ)

### புங்குடுதீவில்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீகணேசவித்தியாலயத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் மரம் நடுகை விழாவைக் கொண்டாடினர். ஏராளமான மரக் கன்றுகள் பாடசாலை வளவில் நாட்டப் பட்டன.

முதலில் அதிபர் திரு. நா. கார்த்திகேசு தலைமையில் மரம் நடுகை ஆரம்பமானது. இவ்வியக்கம் சம்பந்தமான அரசின் கொள்கை பற்றியும், மரங்களின் பல்வேறு பயன்களைப் பற்றியும் பல ஆசிரியர்கள் கருத்துரை வழங்கினர்.

இப்பகுதியில் நிலவும் வரட்சி காரணமாக இவ்வியக்கத்தை மாரிகாலம் தொடங்கியதும் தீவிரப்படுத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ)

### பண்டத்தரிப்பில்

(பண்டத்தரிப்பு)

''தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு மரம் நாட்டும் இயக்கம் அதிக பயனைக் கொடுக்க வல்லது. எங்களது யாழ். குடாநாடு ஒரு வரண்ட பிரதேசமாகும். இங்கு மாரிகாலத்தில் பெய்யும் மழையை சேர்த்து வைப்பதற்கும், மண்ணரிப்பு ஏற்படாது தடுப்பதற்கும் இந்த மரம் நாட்டு இயக்கத்தை இன்னும் தீவிரப்படுத்தி தொடர்ந்து நடாத்த வேண்டும். பாடசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியன மரம் நாட்டும் இயக்கத்தை மேலும் ஊக்கத்துடன் பரந்த அளவில் செயல்படுத்த முன் வரவேண்டும்.''

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மரப் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுகுறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம், யாழ். கல்வி அதிகாரி திரு. வி. இராமநாதன், வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பி. சண்முகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பாடசாலையை விட்டு விலகிய மாணவிகளுக்கான தொழிற் பயிற்சி வகுப்பை மேற்படி கல்லூரியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (உ)

## "கிராமிய வங்கி கிளை நிறுவுக"

(பண்டத்தரிப்பு)

நகை அடைவு பிடிக்கக்கூடிய முறையில் பூரணத்துவம்வாய்ந்தொரு கிராமிய வங்கிக் கிளையை பெரியவிளான் கிராம சேவையாளர் பிரிவில் நிறுவித் தருமாறு பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சித்திரைமேழி ஆகிய இடங்களிலுள்ள ப. நோ. கூ. கிளைக் குழுக்கள் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. (உ)

## வல்வையில் சந்தேகநபர் கைது

(மாவிட்டபுரம்)

மீன் பிடித் தொழிலுக்கு உதவியாக இருந்த நபர் ஒருவர் தாம் வேலை செய்த இடத்தில் மீன்பிடி இயந்திரங்களின் பெற்ருேல் பம்பர்களை வெட்டித் திருடிக்கொண்டு தலைமறைவாருராம். பின்னர் இவர் பொலிசிடம் சிக்கிக் கொண்டார்.

சேந்தாங்குளத்தைச் சேர்ந்த எஸ். சுப்பிரமணியம் என்பவரின் கீழ் மீன்பிடித் தொழிலுக்கு உதவியாக இருந்துவந்த வல்வெட்டித் துறையைச் சேர்ந்த கே. பாலசுப்பிரமணியம் என்னும் பிரஸ்தாப நபர் தமது முதலாளிக்குச் சொந்தமான மீன்பிடி இயந்திரங்கள் நான்கினதும் 800 ரூபா பெறுமதியான பெற்ருேல் பம்பர்களை வெட்டித் திருடிக் கொண்டு தலைமறைவாருராம்' இதையடுத்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசாரின் தகவலையடுத்து வல்வெட்டித்துறைப் பொலிசார் இவரை அங்குவைத்துக் கைது செய்து காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையின் பின் சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும் போதுமா
(புதியபிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
நானும் மனிதன்தான்

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

30-7-78 வரை
மனோகரா (யாழ்ப்பாணம்)
(புத்தம் புதிய பிரதி)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
செந்தாமரை

REGAL Jaffna Now Showing
Daily at 4-45, 7- & 9-30 p m only.
Paul Deneman
in
Scotland Yard
Accepts The Challenged
(Action Flim)

இன்று மகத்தான 75-வது வெற்றித்தினம்
தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

## இரண்டாவது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும்.

இளைஞர்பேரவை மாநாட்டிற்கு கோப்பாய்த் தொகுதி இளைஞர்பேரவை தலைவர் திரு. பரமேஸ்வரன் தலைமை தாங்குவார்.

மாநாட்டில் தமிழ்ஈழ தேசியமன்றம் அமைப்பது, அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருதல், சமூகக்குறைபாடுகள் ஒழித்தல், குடியேற்றம், சமூக பொருளாதார மாற்றம் ஆகியன பற்றி தீர்மானங்கள் எடுக்கப்படும்.

பிற்பகல் 4-00 மணிமுதல் அமரர் திருச்செல்வம் அரங்கில் மாதர்பேரவை மாநாடு ஆரம்பமாகும். மாநாட்டிற்கு திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை தலைமைவகிப்பார். திருமதிகள் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், பிலோமினு லோறன்ஸ், கலாதம்பிமுத்து, செல்வி வசந்தமாலா சின்னத்துரை ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

இலக்கிய மகாநாடு பிற்பகல் 6-00 மணிச்கு அமரர் இராசமாணிக்கம் அரங்கில் ஆரம்பமாகும். மகாநாட்டிற்கு மட்டக்களப்பு எம், பியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான திரு. செ.இராசதுரை தலைமை வகிப்பார்.

மாநாட்டின் சொற்பொழிவுகளை மன்னர் எம், பி. திரு. சூசைதாசன், உடுப்பிட்டி எம். பி, திரு. த. இராஜலிங்கம், வண்ணை ஆனந்தன், திரு. க. பாலசுந்தரம், ஆகியோர் நிகழ்த்துவர்.

கலைநிகழ்ச்சிகள் இரவு 10 மணிக்கு ஆரம்பமாகும். கலைநிக்ழ்ச்சிகளுக்கு சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் தலைமை தாங்குவார். இந்நிகழ்ச்சிகளில் வண. ஜோசெப் மேரி அடிகளார் ''மட்டக்களப்பு நாட்டுக்கூத்து, மலைநாட்டு மக்களின் நாடகம், தனிநடிகர் கே. எஸ். சிவலிங்கத்தின் ''சங்கிலியன் கண்ட தமிழ் ஈழம்'', சங்கானைக் கிளை வாலிபர் மன்றம் அளிக்கும் ''காதலும் காவியமும்''. அற்புதாலயம் நாடக மன்றத்தின் ''குமணன்'' ஆகியவை கலைநிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

30ம் திகதி காலை 9 மணிக்கு மங்கள இசையுடன் அமரர் செல்வா அரங்கில் அரசியல் மாநாடு ஆரம்பமாகும். இம் மாநாட்டில் பொதுச்சபை உறுப்பினர்களும், மூலக்கிளையின் அனுமதி பெற்ற பிரதிநிதிகளும் மட்டுமே கலந்து கொள்வார்கள்.

மாலை 3 மணிக்குகவியரங்கு நுணுவிலூர் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு வன்னியசிங்கம் அரங்கில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். கூட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் தலைமை தாங்குவார்.

வரவேற்புரையை திரு. க. சின்னத்துரை வழங்குவார். மகாநாட்டுத் தீர்மானங்களை தமிழர் கூட்டணிச் செயலாளரும், எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் பிரகடனப்படுத்துவார்.

பொதுக்கூட்டத்தில் சகல கூட்டணி எம். பிக்களும், டாக்டர் உதுமாலெப்பை, ஜனுப் சம்சுதீன், டாக்டர் இலியாஸ், செ. சம்பந்தமூர்த்தி உட்பட இளைஞர், மகளிர் பேரவை உறுப்பினர்களும் உரையாற்றுவார்கள்; (கெ)

## 'அமிரு'க்கு இன்று வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை எம். பி, யும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு, அ. அமிர்தலிங்கத்திற்கு இன்று மாலை, குப்பிழான் விக்னேஸ்வரா வித்தியாசாலை முன்றலில் வரவேற்பு விழாவொன்று நடைபெறவிருக்கிறது. கிளைத் தலைவர் திரு. க. பொ. நடனசிகாமணி தலைமைவகிப்பார். (உ)

## அமைச்சரின் இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வட பகுதிக்கு மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ள பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம இன்றுகாலை 7-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தை வந்தடைவார்.

அமைச்சரை யாழ். அரசாங்க அதிபர் திரு. எல். லயனல் பெர்ணுண்டோ மாலை சூட்டி வரவேற்பார். பின்னர் அமைச்சர் யாழ்ப்பாணம் கிங்ஸ்ஹவுசில் காலை உணவை மேற்கொள்வார்.

பகல் 10-30 மணிச்கு யாழ். அரசாங்கசெயலகத்தில் நடைபெறும் அபிருத்திக்கருத்தரங்கில் கலந்துகொள்வார். இக் கருத்தரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட சகல கூட்டணி எம். பிக்கள், உயர் அதிகாரிகள் கலந்துகொள்வர்.

மாலை 4-30 மணிக்கு காரைநகர் சீ-நோர் அபிவிருத்தித் திட்டத்தை பார்வையிடுவார். (கெ)

## அரசாங்க...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாணச் சீட்டுக்கள் வழங்குதல்

சகல அரசாங்க அலுவலகங்களையும் ஒரேயிடத்தில் வைக்கக்கூடியதாக, ஒரு செயலகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுதல்.

காகிதாதி உபகரணங்களின் பற்றுக்குறையை நீக்குதல்.

சகல சிங்களக் கடிதங்களுக்கும், சுற்றுநிருபங்களுக்கும் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக் கொடுத்தல்.

கச்சேரி ஒய்வூதியக் கணக்காளர் கிளைகளிலுள்ள மேலதிக வேலைகளைக் குறைக்க மேலதிக லிகிதர்களை நியமித்தல். (கெ)

## பாண்டிச்சேரி இராமச்சந்திரன் ராஜினமா செய்யவேண்டும்

சென்னை, ஜூலை 27

''கற்பழிப்புக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பாண்டிச்சேரி உள்துறை அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் தமது பதவியிலிருந்து உடன் ராஜினமாச் செய்யவேண்டும்''

இவ்வாறு தி. மு. க, ஜனதா, இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளையில் திரு. டி. இராமச்சந்திரன் ராஜினமாச் செய்வதா - இல்லையா? என்பது பற்றி தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனே தீர்மானிக்கவேண்டும் என்றும் பாண்டிச்சேரி முதல்வர் திரு. இராமசாமி தெரிவித்துள்ளார். (இ)

## 'ஹண்டி மாஸ்டர்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'ஹண்டி பேரின்பநாயகம், ஞாபகார்த்த சபை, அமரர் ஹண்டி பேரின்பநாயகத்தின் வாழ்க்கை வரலாறு, அன்னூர் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கிய 'ஹண்டி மாஸ்டர்' என்ற நூலை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ளது. ஹண்டி பேரின்பநாயகத்தின் முதலாண்டுத்தினத்தின்போது இந்த நூலை வெளியிட, ஞாபகார்த்தசபை ஏற்பாடுகள் செய்துவருகிறது. இந்நூலை ஆக்கும் பணியில் கொழும்பு வளாக விரிவுரையாளர் திரு. நீலன் கதிர்காமர் ஈடுபட்டு வருகிறுர்.

இப்பணியைத் தனிமையாக, சபை செய்துகொள்ளமுடியாமல் இருக்கிறதென்றும், அன்னூரது பணிகளைக் கௌரவிக்கும் அன்பர்கள், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கணக்கு இல: 895 என்ற முகவரிக்கு அன்பளிப்புகளை அனுப்பிவைக்கவாமென்றும் சபை வேண்டியுள்ளது.

அன்னூரது சேவைக் காலத்தில் அரசியல் துறையில் அல்லது சமூகத்துறையில் இடம்பெற்ற மறக்கமுடியாத சம்பவங்களை திரு. நீலன் கதிர்காமருக்கு அனுப்பிவைத்தால் தகுதியானவற்றை உப குழுவின் சிபார்சுக்கமைய்ச் சேர்த்துக்கொள்ளப்படுமென்றுசபை தெரிவிக்கிறது. (கெ)

## அமைச்சரிடம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளத்தில் அனுப்பப்படுவதால் நிர்வாகச் செயல்பாடுகளில் சகலரும் இம்மொழியைப் புரிந்துகொள்ள முடியாமல், வீண் தாமதமேற்படுகிறது. இதற்கு தமிழ் மொழிபெயர்ப்புக்களை இணைத்து அனுப்பினுல் நிர்வாகச் செயல்பாடுகள் துரிதமாகும். இதைச் சட்டமூலம் அமுலாக்கும்படி கோருகிறேம்:

''மாநகரசபை எல்லைக்குள் வாழும் அரச ஊழியர்கள், அதிக வாடகைக்கு விடுகளில் குடியிருப்பதால் அவர்களுக்கு அரச வீடுகளை வாடகைக்குக் கட்டுவதற்கும். வேறு அரச வீடுகளை வழ்ங்குவதற்கும் வழி செய்யவேண்டும்;

''புகைபிரதத் திணைக்களம் அரச ஊழியர்களுக்குகுறைந்த சட்டணப்பிரயாணபருவகால சீட்டுகளை வழங்குவதுபோல, இ. போ. சபையும் பருவகாலச் சீட்டுக்களை வழங்கவேண்டும். (கெ!உ)

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்தமையை பாராட்டுமுகமாக உடுப்பிட்டி, பருத்தித்துறைக் கிளைகள் இணைந்து விழா ஒன்றினை நடத்த விருக்கின்றன.

இன்று பிற்பகல் இவ்விழா நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் உடுப்பிட்டிக் கிளைத்தலைவர் திரு. எஸ். நடராஜா தலைமையில் நடைபெற விருக்கிறது.

உடுப்பிட்டி பருத்தித்துறை எம். பிக்களும் உரையாற்றுவர். (உ)

## முதலாளித்துவ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொடர்ந்தும் இந்தியாவின் கதை இதுதான். இந்தியா பணக்காரர்களுக்குத்தான் சொர்க்கபூமி. ஏழைக்கு நரகம் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மனச்சாட்சியை விற்றவர்தான் அங்கு வாழமுடியும். ஏனெனில் கண்ணுக்கு முன்பாகவே பல ஏழைகள் உண்ண உணவின்றிக் கஷ்டப்பட்டு உழலும்போது பலரால் எப்படி ஏனைய பொதுவான நிகழ்ச்சிகளை நடாத்தி விழாக்களிலும் பங்கு பற்றி டாம்பீக வாழ்வு வாழ முடிகிறது என்று வியக்கிறுர் வி.பி.

(தொடரும்)

## விழுப்புரம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காலணிவர்சிகளுக்கும் உயர் சாதி இந்துக்களுக்குமிடையில் நெடுங்காலமாகவே குரோதம் இருந்துவந்ததாம். தமிழ்நாடு தற்காலிக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஆர். கிருஷ்ணசாமி கலவரம் நடந்த இடங்களைச் சென்று பார்வையிட்டார்.

OMAX
QUALITY WATCHES

சாந்தி - யாழ்நகர்
(போன்: 7642)
தினசரி 4 காட்சிகள்
ராஜேஸ்வரா (மட்டுநகர்) - லக்ஷ்மி (திருமலை) - றேயல் (வவுனியா) - லிபர்ட்டி (ஹற்றன்)
ஆகிய திரைகளில்
இன்று குதூகல ஆரம்பம்
மற்றும் செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) - சிகிரி (பண்டாரவளை)
திரைகளில் காட்சியளிக்கிறது
அளவையூர் கும்பிளாவளைப் பிள்ளையார் அனுக்கிரகத்தில் யாழ்ப்பாணத்தில் உருவான
ரகுநாதன் - குமுதினி - சந்திரகலா - தனரத்தினம்
ஜவாகர் - டீன்குமார் - விஸ்வநாதராஜா
மற்றும் பல கலைஞர்கள் இணைந்துருவாக்கிய
ஈழத்தின் முதல் தமிழ் 'சினிமாஸ்கோப்' சித்திரம்
தெய்வம் தந்த வீடு

இசை:
ரொக்சாமி - கண்ணன் - நேசன்
தயாரிப்பு:
V. K. T. பொன்னுச்சாமி
நாதசுர இசை: நாதசுரக் கலாநிதி - அளவையூர் என். கே. பத்மநாதன் - கதை, வசனம்: ஏ. ரகுநாதன்
கலைகள் சங்கமிக்கும் இத்திரை ஓவியத்தை காணத்தவறுதீர்கள்!

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu, Post Box No: 49, Jaffna - elegram: Eelanaadu - elephone: 389 - Registered as a News paper in Sri Lanka.